# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W. 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.11.2025.

311 குவிமுச மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நீங்கள் ராமசாமி வீட்டிற்கு சென்று எலக்ட்ரீசியன் வேலை செய்து வந்ததாக புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உங்களுடைய புகாரிலும் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் சொன்னேன். நீஙகள் உடுமலைப்பேட்டையல் குடியிருநது வருகிறிர்கள் என்றால் ஆமாம். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சாமி மற்றும் மாரிமுத்து எங்கு வேலை செய்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் கீதா உங்களுடைய நெருங்கிய உறவினர் என்றால் ஆமாம். கீதா என்பவர் ஊர்க்காவல் படையில் எத்தனை வருடமாக வேலை செய்து வந்தார் என்றால் சுமார் 10 வருடம்.
2. முதல் விசாரணையில் உங்களுடைய அக்கா மகள் கீதா உங்களிடம் பேசி கொண்டிருந்தததாக புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். உங்களிடம் பேசிவிட்டு சென்ற பின் தான் விபத்து நடந்ததாக புகாரில்

சொல்லியுள்ளிர்கள் என்றால் சரிதான். எதிரியின் பெயர் மற்றும் முகவரி காவல் துறையினர் சொன்னதன் பேரில் தான் தெரியும் என்றால் ஆமாம்.

3. விபத்தில் இறந்த கீதா என்பவர் ஊரக பணியில் பணிபுரிந்து வந்ததாக ஆவணங்கள் காவல் துறையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கில் சொல்லப்பட்டுள்ள புகாரில் உள்ள விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். குருவப்பநாயக்கனூர் சாலை என்பது சுமார் 25 அடி அகலம் உள்ள சாலை என்றால் ஆமாம். இந்த சாலையில் சிவா நகர் பக்கத்தில் வடக்கிலும் தெற்கிலும் இரண்டு ரோடுகள் பிரிந்து செல்கிறது என்றால் வடக்கில் ரோடு போகிறது, தெற்கில் ஒரு சந்து போன்று செல்கிறது. வடக்கிலும் தெற்கிலும் ரோடும் சந்தும் போகும் இடத்தில் கிழமேல் ரோட்டில் வேகத்தடை பஞ்சாயத்தாரால் அமைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கிழப்புறம் , இடப்புறம் மேபுறம் மூன்று திசைகளிலும் வேகத்தடை உள்ளது.
4. முதல் விசாரணையில் சொல்வது போல் நீங்கள் ஆம்புலன்ஸ்ஸில் போகவில்லை என்றால் சரிதான். குருவப்பநாயக்கனூர் சாலையில் தென்புறத்திலும் கிழபுறத்திலும் சாக்கடைகள் கிடையாது என்றால் ஆமாம். சிவா நகர் பகுதி என்பது பொதுமக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி என்றால் ஆமாம். இந்த வழக்கில் சொல்லியுள்ள சாமி , மாரிமுத்து ஆகியோர் அல்லது முகவரி உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம். இந்த வழக்கில் சொல்லி இருக்க கூடிய புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதி கொடுத்தீர்கள் என்றால் ஆமாம்.
5. மாரிமுத்து மற்றும் சாமி என்ன வேலை செய்து வருகிறார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் ஆமாம். இந்த புகாரில் உள்ள கையெழுத்து தவிர நீங்கள் இந்த வழக்கு சம்பந்தமான வேறு ஆவணங்களில் கையொப்பம் செய்யவில்லை என்றால் ஆமாம். விபத்தில் இறந்ததாக சொல்லப்படக்கூடிய கீதா என்பவர் உங்களுக்கு நெருங்கிய உறவினர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக போய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய நீங்கள் கீதாவின் உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் ஆமாம்.
6. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் கீதா என்பவர் தலைக்கவசம் அணிந்து இருந்தாரா என்பது பற்றி தெரியாது என்றால் ஆமாம். இந்த விபத்திற்கு எதிரி காரணம் அல்ல என்றாலும் இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எதிரி இந்த

வாகனத்தை இயக்கவில்லை என்றாலும் சரியல்ல. பழுதடைந்து நின்று இருந்த வாகனத்தின் மீது செல்போனில் பேசிக்கொண்டு வந்து கீதா என்பவர் விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு கீதாவின் அஜாக்கிரதை கவனக்குறைவு தான் காரணம் என்றாலும் சரியல்ல. மோட்டார் வாகன விபத்தில் நஷ்ட ஈடு பெற வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.263 /2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிமுத்து | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சிவராஜ் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.11.2025.

<u>**311** குவிமுச மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலிசார் உங்களை_விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். எங்கு வைத்து எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 1:20 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். உங்களை விசாரித்த போலீசார் என்ன பதவியில் இருந்தார் என்றால் எஸ்.ஐயாக இருந்தார். நீங்கள் எந்த ஊரில் குடியிருந்து வருவதாக போலீசார் விசாரணையில் சொல்லி இருக்கிறீர்கள் என்றால் ராமைய்ய கவுண்டன் புதூர் குறிச்சிக்கோட்டை. போலீசார் விசாரிக்கும் பொழுது தான் அந்த பகுதிக்கு வருகிறீர்கள் என்றால் இல்லை அதற்கு முன்பே இருந்தேன்.
2. எத்தனை போலீசார் வந்தார்கள் என்றால் ஒரு போலீசார் வந்தார். உங்களிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் பதிவு செய்தார்கள். 1:20 மணிக்கே உங்களது வாக்குமூலம் பதிவு செய்து விட்டார்களா என்றால் ஆமாம். RG புதூர் என்றும் ராமைய்ய கவுண்டன் புதூர் என்றும் சொல்லுவார்கள்.
3. ராமையா கவுண்ட புதூரில் இருந்து முதல் விசாரணையில்

சொல்லியுள்ள சிவா நகருக்கு என்ன தேவைக்காக சென்றீர்கள் என்பது குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். சிவா நகர் என்பது பொதுமக்கள் அதிகமாக குடியிருக்கும் பகுதி என்றாலும் அருகில் பஸ் ஸ்டாப் உள்ளது என்றாலும் பஸ் ஸ்டாப் உள்ளுக்குள் உள்ளது அருகில் உள்ளது. சிவாநகர் பகுதி சிவா நகர் பகுதி ஒரு L– Bend போன்று திரும்பக்கூடிய குறுகலான பகுதி என்றால் ஆமாம். உங்களுக்கு இந்த வழக்கிற்கு முன்பாக சிவகுமார் என்பவரை யார் என்று தெரியாது என்றால் சிவகுமார் என்பவரை தெரியாது.

4. கீதா என்பவர் என்ன வேலை செய்து வருகிறார் என்ற விவரம் தெரியாது என்றால் அடிப்பட்ட பின்னர் தான் தெரிந்தது. கீதா என்பவர் என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்பது போலீசார் சொல்லி தான் தெரிந்து கொண்டீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் ஆமாம். கீதாவின் கணவர் மற்றும் உறவினர்கள் விபரம் தெரியாது என்றால் ஆமாம். கீதாவிற்கு தண்ணீர் கொடுக்க முயற்சி செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நீங்கள் அது போன்ற போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கினுடைய எதிரி பற்றிய விபரம் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம். நீங்கள் போலீசார் சொல்லிக் கொடுத்ததற்கு இணங்க இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் இந்த விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும் சரியல்ல.

.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.11.2025.

311 குவிமுச மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நீங்கள் எலக்டரிசியன் வேலை செய்யவில்லை என்றால் ஆமாம். அசா.1 சிவக்குமாரை யார் என்று தெரியாது என்றால் சரிதான். சிவா நகர் என்பது பொதுமக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி என்றால் 07.00 –08.00 மணிக்கு இருக்க மாட்டார்கள் குடியிருப்புகள் அதிகம் உள்ளது என்றால் ஆமாம். நீங்கள் ஆலாம்பாளையம் ஊராட்சியில் கிராம ஊராட்சி முன்னால் தலைவராக இருந்து வந்திர்கள் என்றால் சரிதான். முக்கிய அரசியல் கட்சியில் முக்கிய பொறுப்பில் உள்ளீர்கள் என்றால் சரிதான். அரசியல் கட்சியில் இருப்பதால் அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவீர்கள் என்றால் ஆமாம்.
2. கீதா என்பவர் மக்கள் நல பணியாளராக இருந்தார் என்பதற்கு ஆவணங்களை நீங்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான். கீதா என்பவர் உங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் என்ன பணிக்காக சென்றார்கள் என்ற விபரம் நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எவ்வாறு தெரியும் என்று போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் போலீஸ் கேட்கவில்லை. எந்த பணிக்காக சென்று கொண்டிருந்தார்கள் என்று போலீசார்

விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் தற்போது தான் நீதிமன்றத்தில் சொல்கிறீர்கள் என்றாலும் ஆமாம்.

3. உங்கள் முதல் விசாரணையில் சொல்லி இருப்பது போல் வண்டியின் பதிவு எண் போன்ற விபரங்கள் போலீசார் சொல்லிக் கொடுத்து தான் தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு முன்பே தெரியும். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை.பதிவு எண் போன்ற விவரங்களை வழக்கு கோப்பை பார்த்து தான் தெரியும் என்றால் இல்லை. கீதா என்பவர் ஊறுகாவல் படையில் பணியில் இருந்தார் என்றால் ஆமாம். கீதா ஊர்க்காவல் பணியில் இருந்ததால் காவல் துறையினருடன் பணிபுரிவதும் வழக்கம் என்றால் ஆமாம்.
4. கீதா என்பவர் சம்பவ சமயத்தில் ஹெல்மெட் அணிந்து இருந்தாரா என்பது குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஹெல்மெட் அணிந்திருந்தாரா என்பதை நான் பார்க்கவில்லை. போலிசார் உங்களை எத்தனை மணிக்கு எப்போது விசாரித்தார்கள் என்றால் ஜி ஹெச் இல் வைத்து விசாரித்தார்கள். அமராவதியில் கம்பளைண்ட் கொடுத்தது பின்னிட்டு வந்தார்கள். எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மாலை 4.00 மணி இருக்கும்.
5. உங்களது போலிசார் விசாரணையில் நீங்கள் ஜிஹெச் சென்றதாக சொல்லவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தமாக நீங்கள் எப்போது காவல் நிலையம் சென்றீர்கள் என்றால் சம்பந்தப்பட்டவர்கள் தான் காவல் நிலையம் சென்றார்கள், நான் செல்லவில்லை. கீதாவின் கணவர் ராஜேஸ்வரன் உங்களது ஊரான ஆலாம்பாளையம் சேர்ந்தவர் என்றால் குருவப்பநாயக்கனூரை சேர்ந்தவர். அவரை உங்களுக்கு எத்தனை வருடங்கள் பழக்கம் என்றால் அவர் பிறந்த காலத்தில் இருந்து பழக்கம். குடும்ப நண்பர் என்றால் ஆமாம்.
6. இந்த வழக்கில் உங்களது குடும்ப நண்பர் ராஜேஷ்வரன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நீங்கள் சாட்சியமாக இருக்கிறீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்தவித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. கீதா என்பவர் செல்போன் பேசிக்கொண்டு பழுதாகி நின்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதி தானாக விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றாலும் கீதா என்பவரது கவன குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. எதிரி இந்த விபத்திற்கு காரணம் அல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஸ்வரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.11.2025.

311 குவிமுச மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. உங்களுக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். உங்கள் மனைவி ஊர்க்காவல் படையில் நீண்ட வருடங்களாக பணிபுரிந்து வந்தார் என்றால் ஆமாம். நீங்கள் கேள்விப்பட்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் ஆமாம்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala B.Com., B.L.,

நீதித்துறை நடுவர் எண்.1

உடுமலைப்பேட்டை.